**தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| 2012 மே 21 ஆந் திகதிய EST/8/EXAMS/05/1007 -1 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கடிதம் | பேச்சு மற்றும் எழுத்து மூல பரீட்சைகளுக்காக பகுதி நேர அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வள பங்களிப்பாளர்களுக்கும் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் தமிழ் மொழி பேச்சு மற்றும் எழுத்து பரீட்சைகளை நடத்துதல் மற்றும் மொழிப் பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களை பதிவு செய்வதற்காக நிறுவனத்தில் முழுநேரம் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு | பரீட்சைகளை நடாத்துவதற்காக கணிசமான பதவியணியினர் தேவையாக இருந்தமையால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி பரீட்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந் தது. | முழுநேர உத்தியோகத்தர் களுக்கு செலுத்துவதற்காக கொடுப்பனவு திட்ட முறைமை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அங்கீகாரம் இன்றி ரூபா 631,860 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீண்டெழும் செலவின விடயத்திற்கான மொத்த நிதியேற்பாடு ரூபா 200,000 உம் பயன்படுத்தப்படால் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்கான நிதியேற்பாட்டுத் தொகையிலிருந்து நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் 63 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,051,391 ஆன சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட COVID-19 தொற்று நோய் நிலைமையால் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை தயாரித்தல் குறித்துரைத்த பிரகாரம் திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்கள் என்பவற்றுக்கான நிதியேற்பாட்டுத் தொகையில் 36 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | COVID-19 நிலைமையின் காரணமாக அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்கான தேவையான நடவடிக்கைகள் தவிர அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற அலுவலக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை தயாரித்தல் குறித்துரைத்த பிரகாரம் திட்டமிடப்படல் வேண்டும். |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு பாதுகாப்பு சேவையினை வழங்குகின்ற ட்ரான்ஸ் ஏசியா செக்கியூரிட்டி சிஸ்டம் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் பகல் காலத்தின் போது ஒரு பணிப்பொறுப்பு உத்தியோகத்தர் ரும், ஒரு பெண் உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய போதிலும் அதற்கு மேலதிகமாக கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். மேலும் அந்த உத்தியோகத்தருக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 166,770 தொகையும், 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 359,325 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | பாதுகாப்பு சேவை உடன்படிக்கையின் பிரகாரம் பகல் சேவை முறைக்காக ஒரு பணிப்பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் சேவையின் தேவையின் அடிப்படையில் (பரீட்சைக் கடமைகளுக்காக மற்றும் சுகாதார காரணங்களின் அடிப்படையில்) மேலதிக பாதுகாப்பு உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்டிருந்தது. | மேலதிக பாதுகாப்பு உத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்தும் போது சரியான அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சிங்களம், தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருள் தயாரிப்பதற்காக ரூபா 4,860,000 தொகையும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பு மென்பொருளை தயாரிப்பதற்காக ரூபா 5,950,000 தொகையும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு | இந்த மொழிபெயர்ப்பு மென்பொருளை பயன்படுத்துவதற்கு பொருத்தமாக உள்ளது என்ற உறுதிப்படுத்தலை விரைவாக வழங்குமாறு அரசாங்க சேவைகள், மாகாண மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022.03.02 ஆந் திகதிய | சிங்கள மொழி தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி சிங்கள மொழிக்கும் மொழி பெயர்க்கும் மென்பொருளை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. இந்த மென்பொருளிலிருந்து மொழி பெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தரவுகள் அதிக அளவில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அதற்காக குறித்துரைத்த திட்டமுறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த மென்பொருளின் உரித்து இன்னும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்றமையாலும், திணைக்களத்திற்கு சொந்தமாக அவ்வாறான மென்பொருளொன்றை பேணிச் செல்வதற்கு தேவையான Server வசதிகள் காணப்படாமையினாலும் பல்கலைக்கழகத்துடன் இணையாமல் மென்பொருளை பயன்படுத்துதல் வசதியீனமாக இருந்தது. உடன்படிக்கையில் குறித்துரைத்த இணக்கப்பாடு காணப்படாமையின் காரணமாக இந்த செலவினத்தை செய்ததால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | PMA/ADM/EST/GA19/DOL ஆம் இலக்க கடிதம் மூலமும் அந்த பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உறுதிப்படுத்தலை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏனைய நிறுவனங்களுக்கு அதனை பயன்படுத்துவதற்கு வசதிகள் வழங்க முடியும். | வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட நிலையின் பதவி வெற்றிடங்கள் 06 ஆகவும், மூன்றாம் நிலையில் பதவி வெற்றிடங்கள் 34 ஆகவும் மற்றும் ஆரம்ப நிலையில் வெற்றிடங்கள் 02 ஆகவும் இருந்ததுடன், இரண்டாம் நிலையின் பதவிகளில் மிகை ஊழியர் எண்ணிக்கை 03 ஆகும். மீளாய்வாண்டின் போது ஆளணி சம்பள செலவினம் | திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்த்ததன் அடிப்படையில் இரண்டாம் நிலையில் உத்தியோகத்தர்களில் மிகை ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். அந்தந்த நிறுவனங்களுக்கே | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் மிகை பதவியணியினருக்காக அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 98,545,710 ஆக இருந்தது. | தற்போது 16 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திணைக்களத்தின் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் ஆரம்ப நிலைகளின் வெற்றிடங்கள் தொடர்பாகவும் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரிக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டு முதல் மொழிபெயர்ப்பு உதவியாளர்களாக சேவைக்கு சேர்க்கப்பட்ட 42 உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். 2021 ஆம் ஆண்டிற்காக இந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 26,461,700 சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அரசகரும மொழிகள் திணைக்களத்தால் பணிக் கையளித்தல் மேற்கொண்டு திணைக்களத்திற்கு சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதும் 16 உத்தியோகத்தர்கள் அந்தந்த நிறுவனங்களுக்கே நியமிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் திணைக்களத்தின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு கடமைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர் களுக்கு பணிக் கையளித்தலை மேற்கொண்டு திணைக்களத்திற்கு சேவையினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |